
# ஆலய ஊழியன்

ஆசிரியர்: இரா. முல்லைவேந்தன்.

மணி 2 ] திங்கள் இதழ் 1-11-78 8 பக்கம் விலை 50 காசுகள் [ ஓசை 12

## அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில்

மணவாளநல்லூர் - 606109,

விருத்தாசலம் வட்டம், தென்னாற்காடு மாவட்டம்.

" பங்குனி பெருவிழா காணீர் "

நடுநாட்டு திருத்தலங்கள் பலவற்றில் திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலத்திற்கு மேற்கே 1½ கல் தொலைவில் சேலம் சாலையில் கொளஞ்சியப்பர் திருக்கோயில் உள்ளது. நாளும் நலம் பல பெறும் நோக்கோடு முருக அன்பர்கள் வந்து கொளஞ்சியப்பரை வழிபட்டு செல்கின்றனர், இது பிரார்த்தனை தலமாகும். "நினைத்ததை நடத்திடும் வருத்துனை வந்திரும்" மற்றும் தீராநோய் தீர்த்து வாராப்பொருளையும் வரவழைத்து தரும் தெய்வம் கொளஞ்சியப்பர். இத்திருக்கோயில் நாளும் பல பிணியாளர்கள் குணமடைதும், மற்றும் மனதில் உள்ள எந்த வித குறைகளையும் பிராது மூலம் எழுதிக் கட்டு நிவர்த்தி அடைந்து பலர் பலவித பலன்களை அடைகின்றனர், இத்திருக்கோயிலில் காவடி எடுத்தல், பிரார்த்தனை செய்து கோழி, கால்நடைகள் மற்றும் தானியங்கள் மூலமும் உண்டியலில் பணமாகவும் பவுன், வெள்ளி நகைகளாகவும் செலுத்தி கொளஞ்சியப்பர் அருளுக்கு பாத்திரமாகின்றனர். ஆகவே தாங்களுய் ஒருமுறை வந்து கொளஞ்சியப்பர் அருளுக்கு பாத்திரமாக வேண்டுகிறோம்.

இங்ஙனம்

நிர்வாக அதிகாரி

---

வடபழநி ஆண்டவர் துணை.

அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை-600 026.

தொலைபேசி - 421676

## மகா கந்த சஷ்டி விழா அழைப்பிதழ்

1977

திருமுருகன் தலங்களுள் தொன்மை வாய்ந்த தென்பழநியில் பழநியாண்டியாகவும் சென்னை கோடம்பாக்கம் என்ற வடபழநியில் வேண்டுவோர்க்கு வேண்டும் வரமளித்துக் கொண்டு கலியுக வரதனுய் எழுந்தருளியிருப்பவர் அருள்மிகு வடபழநி ஆண்டவர் கருணையே வடிவானஇக்கந்தபிரானுக்கு 31-10-1978 செவ்வாய்க்கிழமை முதல் 10-11-1978 வெள்ளிக்கிழமை முடிய கந்த சஷ்டி விழா நடக்கவிருக்கிறது. அன்பர்கள் அனைவரும் கந்த சஷ்டி விழாவில் கலந்து கெண்டு அருள்மிகு வடபழநி ஆண்டவரின் பேரருளைப் பெற்றுய்ய பெரிதும் வேண்டுகிறேன்.

அருள்மிகு வடபழநி ஆண்டவருக்கு கந்த சஷ்டி லட்சார்ச்சனை விழா 31-10-1978 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பித்து 5-11-1978 ஞாயிற்றுக்கிழமை உச்சிக் காலத்துடன் பூர்த்தி செய்யப்படும். லட்சார்ச்சனையில் பங்கு கொள்ள விரும்பும் பேரன்பர்கள் அர்ச்சனை 1க்கு ரூபாய் 15- செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறது.

N. R. லிங்கமராஜா, M.A.,
நிர்வாக அலுவலர்/தக்கார்.

# தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கம்

பதிவு எண் 12/72.

தலைமைச் செயலகம்: திருவாரூர் 610001.

மாநில சங்க சிறப்புத் தலைவர் திருமிகு துரை கோவிந்தராசன், எம். எல். ஏ., அவர்கள், மாநிலத் தலைவர் திரு. இரா. தென்னன், பொதுச்செயலாளர் திரு எஸ், முத்துகணபதி, மாநிலப் பொருளாளர் திரு கு. சொக்கலிங்கம் மற்றும் மாநில துணைப் பொதுச்செயலாளர் திரு ஏ. கே. வேலாயுதம் ஆகியோரது தென் மாவட்ட சுற்றுப்பயணத் திட்டம் மற்றும் கலந்து கொள்ளும் சிறப்புக் கூட்டங்கள் விபரப் பட்டியல்-

மேற்படி சுற்றுப்பயணத் திட்டத்தில் ஆலய ஊழியன் ஆசிரியர் திரு இரா. முல்லை வேந்தன் அவர்களும் கலந்து கொள்வார்.

1. தஞ்சை மாவட்டம்-நாள் 12-11-78-ஞாயிற்றுக் கிழமை:

| நேரம். 1. | ஊர்&இடம். 2. | கூட்டமைப்பு. 3. |
|---|---|---|
| காலை | | |
| 7.00 மணி | தஞ்சாவூர் ஸ்ரீ பெருவுடையார் ஆலயம். | தஞ்சை ஒரத்தநாடு வட்ட ஊழியர்கள் கூட்டம், வழியனுப்புதல். |
| 8.00— 9.00 | சுவாமிமலை, ஸ்ரீ சுவாமிநாதசுவாமி ஆலயம். | கும்பகோணம் பாபநாசம் வட்ட ஆலய ஊழியர்கள் கூட்டம். |
| 10.00—11.00 | மாயூரம்—திருஇந்தளூர், பரிமள ரெங்கநாதர் ஆலயம். | சீர்காழி மாயூரம் வட்ட ஆலய ஊழியககள் கூட்டம் |
| 12.00— 2.00 | திருப்புகளூர், ஸ்ரீ அக்னிஸ்சுவரர் ஆலயம். | நன்னிலம் வட்ட ஆலய ஊழியர்கள் கூட்டம் |
| 3.00— 4.00 | சிக்கல், ஸ்ரீ நவநீதேஸ்வரர் ஆலயம். | நாகை திருவாரூர் வட்ட ஆலய ஊழியர்கள் கூடடம் |
| மாலை | | |
| 5.00— 6.00 | வேதாரண்யம்' ஸ்ரீ வேதாரன்யேஸ்வரர் ஆலயம், | திருத்துரைப்பூண்டி வட்ட ஆலய ஊழியர்கள் கூட்டம் |
| 7.00— 9.00 | பட்டுக்கோட்டை, ஸ்ரீ நாடியம்மன் ஆலய மன்டகப்படி கட்டிடம். | பேராவூரனி, பட்டுக்கோட்டை மன்னுர்குடி வட்ட கூட்டம்- |

இரவு பட்டுக்கோட்டை பயண மாளிகையில் தங்கல்.

13—11—78 திங்கள் காலை 6-00 மணி பட்டுக்கோட்டையிலிருந்து புதுக்கோட்டை புறப்படுதல்.

2. புதுக்கோட்டை & இராமநாதபுரம் மாவட்டம் - 13-11-78 திங்கட்கிழமை,

| | | |
|---|---|---|
| காலை | | |
| 8.00— 9.00 | புதுக்கோட்டை அ/மி சாந்தலிங்கேஸ்வரர் ஆலயம் | புதுக்கோட்டை மாவட்ட ஊழியர்கள் கூட்டம் |
| 10.30—11.30 | காரைக்குடி அ/மி கொப்புடையம்மன் ஆலயம். | ராமநாதபுரம் கிழக்கு மாவட்ட ஊழியர்கள் கூட்டம். |

மதியம்: 2.30— 3.00 மண்டபம் ரயில்வே ஸ்டேஷன். ரயில் மூலம் இராமேஸ்வரம் செல்லல்:

| | | |
|---|---|---|
| மாலை | | |
| 5.00— 6.00 | ராமேஸ்வரம் அ/மி இராமநாதசுவாமி ஆலயம் | அ/மி ராமநாதசுவாமி ஆலய ஊழியர்கள் கூட்டம் |

இரவு இராமேஸ்வரம் ஓய்வு விடுதியில் தங்கல்.

14—11—78 செவ்வாய் காலை 4—30 இரமேஸ்வரத்திலிருந்து புறப்பட்டு ரயில் மூலம் மண்டபம் சேர்தல்.

6—00 மண்டபத்திலிருந்து கார் மூலம் தூத்துக்குடி புறப்படுதல்.

3. நெல்லை மாவட்டம் & கன்னியாகுமரி மாவட்டம் - 14-11-78 செவ்வாய்.

| | | |
|---|---|---|
| 9.30—10.30 | தூத்துக்குடி அ/மி சங்கமேஸ்வரர் ஆலயம். | தூத்துக்குடி வட்ட ஆலய ஊழியர்கள் கூட்டம் |
| 11.30— 2.00 | திருச்செந்தூர். அ/மி சுப்ரமண்யசுவாமி ஆலயம். | திருச்செந்தூர் ஆலய ஊழியர்கள் கூட்டம் |
| மாலை | | |
| 5.30— 7.00 | கன்னியாகுமரி அ/மி குமரியம்மன் ஆலயம், | கன்னியாகுமாரி ஆலய ஊழியர்கள் கூட்டம். |
| 8.30— 9.30 | சுதந்திரம் அ/மி தாணுமாலயன் ஆலயம். | கன்னியாகுமரி மாவட்ட ஆலய ஊழியர்கள் கூட்டம். |

# தீபாவளிப் பண்டிகை கடன் !

### மாநில சங்க வேண்டுகோளுக்கு ஆணையர் உத்திரவு !

—0—

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
ஆணையாளர் அலுவலகம்,
சென்னை—34

மு. மு. 72334—78 நாள் 5-10-78.

பொருள்:- தீபாவளிப் பண்டிகை முன்பணம் மற்றும்தீபாவளியை முன்னிட்டு அக்டோபர் மாத சம்பளத்தை 27-10.78 தேதியில் ,காடுக்கக் கேட்டல்.

பார்வை:: 1) இவ்வலுவலக மு. மு. 76635/77 நாள் 14-10-78.

2) தலைவர் தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கம், திருவாரூர் கடிதம் நாள் 26-8-78.

பார்வையில் கானும் குறிப்பில் தமிழ்நாடு ஆலய ஊழியர் சங்கம் ஆலய ஊழியர்களுக்கு தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு அக்டோபர் மாத சம்பளத்தை முன் கூட்டியே 27-10-78ம் தேதியே கொடுத்து உதவிடக் கோரப்பட்டுள்ளது. ஷ கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி ஆலய ஊழியர்களுக்கு அக்டோபர் மாத சம்பளத்தை தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 27-10-78ம் தேதியே முன் கூட்டி அளிக்க எல்லா துணை மற்றும் உதவி ஆணையர்கள் தக்க அறிவுரைகள் சமர்ப்பிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

2) மேலும் தீபாவளியை முன்னிட்டு ஆலய ஊழியர்களுக்கு அவர்களது அடிப்படை சம்பளத்தில் ஒன்றரை மாத சம்பளம் அல்லது ரூ. 250/- இதில் எது குறைவோ அத்தொகையை தீபாவளி முன் பணமாக வழங்கவும் அத்தொகையை 10 மாத தவணைகளில் பிடித்தம் செய்யவும் (இவ்வலுவலக உத்திரவு மு. மு. 70786/77 நாள் 23-9-76ல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்குட்பட்டு) ஆலயச் செயல் அலுவல்ர்களுக்குத் தக்க உத்திரவு வழங்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்) செ. பாலசுப்பிரமணியன்,
ஆணையாளருக்காக
5-10-78

பெறுநர்:- எல்லா துணை ஆணையர்கள்

துணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி ஆலயம், பழனி, மதுரை மாவட்டம்.

எல்லா உதவி ஆணையர்கள்,

நகல்:- எல்லா முதல்நிலை ஆலய செயல் அலுவலர்களுக்கும்.

தலைவர், தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டம்.

# மாநில பொருப்பாளர்கள் சுற்றுப் பயணம்.

தமிழ் நாடு ஆலய ஊழியர்கள் சங்க மாநில சிறப்புத் தலைவர் திருமிகு. துரை. கோவிந்தராசன், எம். எல். ஏ., மாநிலத் தலைவர் திரு, இரா. தென்னன் மாநில பொதுச் செயலாளர் திரு. எஸ். முத்துக் கணபதி, மாநிலத் துணைத் தலைவர் திரு. சி. கந்தசாமி, துணைப் பொது செயலாளர் திரு. ஏ. கே வேலாயுதம் திரு. ஆர். வேலாயுதம் ஆலய ஊழியன் ஆசிரியர் திரு. இரா. முல்லைவேந்தன் ஆகியோர் 12.11.78 முதல் 17.11.78 வரை தஞ்சை, புதுவை, முகவை, நெல்லை, குமரி, மதுரை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிருர்கள். அந்தந்த மாவட்ட பொருப்பாளர்கள் அனைவரும் மாநில சங்கத்துடன் உடன் தொடர்பு கொள்ள இதன் மூலம் வேண்டப்படுகிறது.

இவண்,
A. K. வேலாயுதம்,
மாநில துணை பொதுச் செயலாளர்.

# மாநில பொதுச்செயலாளரின் அவசர வேண்டுகோள் !

1) 12 கிரேடு ஊதியம் அமுலாக்காத ஆலயங்கள்
2) 1-4-77 பஞ்சப்படி ரூ 5, 10, 15 வீதர் (30./· மேல் ரூ 5/: கொடுக்கப்படாத ஆலயங்கள்
3) 1.12-77 இடைக்கால நிவாரணம் ரூபாய் 10 கொடுக்கப்படாத ஆலயங்கள்
4) ஊதிய உயர்வு (இன்கிரிமென்ட்) க்ஷேமநலநிதி (P.F) 10000க்கு மேல் அமுலாக்காத ஆலயங்கள்
5) சிறப்பு ஊதியம் கொடுக்கப்படாத ஆலயங்கள்
6) ஞாயிறு பொது விடுமுறை அமுல் படுத்தாத ஆலயங்கள்
7) அலுவலக நேரம் காலை 10-00 முதல் மாலை 5 வரை அமுல் படுத்தாத ஆலயங்கள்
8) ஓய்வு பெற்ற பென்ஷன் வாங்குவோர் 45 வயதிற்கு மேல் உள்ளவர்களை, ஆலயத்தின் சட்டத்திற்கு புறம்பாக ஆலய பணிக்காக நியமிக்கும ஆலயங்கள்
9) ஓய்வு பெற்ற ஆலய ஊழியர்களுக்கு Gratiuty வழங்கப்படாத ஆலயங்கள்
10) தீபாவளிப் பண்டிகைக் கடன் வழங்கப்படாத ஆலயங்கள்
10) 1-8-78 க்குப்பின் பணிக்காலத்தில் இறந்து போன ஊழியர் களின் விபரம்
12) அரசு ஆணையர் உத்தரவு அமுலாக்காத ஆலயங்கள்
13) அலுவலக ஊழியர்கள்—உள் துறை ஊழியர்கள் பட்டியல்

அனைத்து ஆலயங்களிலும் பணிபுரிகின்ற ஊழியர்கள் தங்கள் குறைகளை, அவ்வப்போது மாநில சங்கத்திற்கும், மாவட்ட, வட்ட சங்கங்களுக்கும் தெரிவித்து சங்கத்தின் மூலம் தீர்வு காண கேட்டுக் கொள்கிறோம்.

S. முத்துகணபதி,
மாநில பொதுச் செயலாளர்.

# சென்னை செங்கை மாவட்ட சுற்று பயணம் !

மாநிலத் துணைத் தலைவர் திரு. சி. கந்தசாமி, சென்னை மாவட்ட தலைவர் புரசை பெரியவர் திரு. பி. முனுசாமி, செங்கை மாவட்ட தலைவர் திரு எஸ். கல்யானசுந்தரம், "ஆலய ஆழியன்" ஆசிரியர் திரு. இரா. முல்லைவேந்தன், கிருபாகரன், குப்புசாமி, C. K. கிருஷ்ணமூர்த்தி, நீலகண்டன் முதலியோர், சென்னை கபாலீசுவரர் ஆலயம், திருத்தணி சுப்ரமணியசுவாமி ஆலயம், காஞ்சீபுரம் நகரத் திருக்கோயில்கள், செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம் திருப்போரூர் ஆகிய இடங்களில் சென்று ஆணையர் அவர்களின் உத்தரவுகள் ஊழியர்களுக்கு சரியாக அமுலாக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும், ஆலய ஊழியர்கள் குறைகளை நேரில் அறிந்து கொள்ளவும் 4-11-78 முதல் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிருர்கள். அனைத்து ஊழியர்கள் மாவட்டப் பொறுப்பாளர்கள் உடன் தொடர்பு கொள்ள வேண்டப்படுகிறது.

இவண்,
சி. கந்தசாமி.

27-10-78

மாநிலத் துணைத் தலைவர்,
தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கம்,
வடபழநி' ஆண்டவர் ஆலயம்,
வடபழநி, சென்னை-600026

தொலைபேசி 661332

எங்களிடம் எல்லா குரூப் ஆப் மில்ஸ்
துணிகளும் கைத்தறித் துணிகளும்
நியாயமான விலையில் கிடைக்கும்.

**சிகாமணி சில்க் பேலஸ்**

87, ஜி. கோவில் தெரு,
புரசைவாக்கம் சென்னை 600084

# தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கம்

## மாநில செயற்குழு தீர்மானங்கள் !

## கடலூரில் 1-10-78 ல் நடைபெற்ற செயற்குழுவினல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் !

தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கத்தின் மாநில செயற்குழு அவசரக்கூட்டம் மாநிலத் தலைவர் திரு. இரா. தென்னன் தலைமையில் 1-10-78 ஞாயிறு காலை 11.00 மணிக்கு கடலூர் — திருப்பாப்புலியூர் ஆரிய வைசிய கல்யாண மண்டபத்தில் நடை பெற்ற கூட்ட நடவடிக்கைகள் :—

பொருள் : 1 தூய்மையான ஆலய நிர்வாகம் நடைபெறவும் ஆலய வருவாய் பெருகவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதற்கு பாராட்டு தெரிவித்தல்.

தீர்மானம் : அரசுக்கு பாராட்டுத் தெரிவிக்க தீர்மானிக்கப்பட்டது.

பொ. 2 சங்க கோரிக்கைகள் மீது அரசு கடித எண், (69847/11 (2) 76-11 நாள் 29-8-78 அறநிலையத்துறை செயலாளர் அறிவித்த முடிவுகள் பற்றி பரிசீலித்தல் :

தீர்மானம் : பரிசீலிக்கப்பட்டது.

அரசு கடித எண். 69847-11 (2) 76-11 நாள் 29-8-78 அறநிலையத்துறை செயலாளர் அறிவித்த முடிவு கடிதத்தில் கண்டுள்ள கோரிக்கை எண். 9. ஆலய நிலங்களுக்கு விதிவிலக்கு அளிப்பதற்கும் கோரிக்கை எண். 2. ஆலய ஊழியர்களுக்கு குடும்ப பாதுகாப்பு திட்டம் அமுல்படுத்தவும் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளதாக தெரிவித்திருப்பதை வரவேற்றும் நிறைவேற்றிக் கொடுத்திட தமிழ்நாடு அரசைக் கேட்டுக்கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

கோரிக்கை 6-ஐ பரிசீலனை செய்து ஆலய ஊழியர்களுக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாமல் செயல்படுத்த அரசை வேண்டிக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

பொ. 3 1973ம் ஆண்டு தமிழக அரசு ஆலய ஊழியர்களுக்கு 12 கிரேடு சம்பள விகிதங்களை அறநிலையதுறை ஆணையர் மூலம் நிர்ணயித்து சுற்றறிக்கை எண். ஆர். டிஸ். நெம்பர் 50459-72 அ. 2. நாள் 2-4-73 பத்திரவுபடி அமுல்படுத்தியது, அது ஆறு ஆண்டு காலம் ஆகிவிட்டதால் ஆலய ஊழியர்கள் குறைந்த சம்பளத்தில் மிகவும் வாழ்க்கை நடத்திட கஷ்டப்படுவதால், காலநிலைக்கு ஏற்ப மாற்றி புதிய சம்பள விகிதங்களை நிர்ணயித்து, ஊதிய நிர்ணய உயர்வு அரசு அளிக்க; முன் போல அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் மூலம் செய்து கொடுக்க மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்ளுதல் பற்றி :—

தீர் : பொருளில் கண்டபடி நடைமுறையில் உள்ள 12 கிரேடு சம்பள விகிதங்களை மாற்றி புதிய சம்பள விகிதங்களை நிர்ணயித்து ஊதிய நிர்ணய உயர்வு 1-7-78 முதல் அரசு அளிக்க முன் போல அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் மூலம் அரசு ஆணையாக (ஜி. ஓ.) கொடுக்க மாண்புமிகு. அறநிலையத்துறை அமைச்சர் அவர்களையும். தமிழ்நாடு அரசையும் கேட்டுக்கொண்டு தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் நியாயமான பஞ்சப்படியும் சேர்த்து கொடுத்திடவும், வீட்டு வாடகைபடி நகர ஈட்டுப்படி கொடுத்திடவும் கேட்டுக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

பொ. 4 ஆலய வருமானத்தில் 40% வருமானத்தை பட்டியலிலுள்ள ஆலயங்களிலிருந்து சகாயத் தொகை வசூலிப்பது போல அறநிலையத்துறை வசூலித்திடவும் மேற்படி தொகை "ஆலய ஊழியர்கள் ஊதிய நிதி" என்ற பெயரில் ஆணையர் நேரடியாக நிர்ணயிக்கவும், ஆலய ஊழியர்கள் சம்பளங்களை ஆலய நிர்வாக அதிகாரிகள், நேரடியாக ஆணையர் அவர்களுக்கு பட்டியல் சமர்ப்பித்து ஊதியத் தொகையை பெற்று ஊதியத்தை மாதா மாதம் முதல் தேதியே வழங்கிடவும் வகை செய்ய மாண்புமிகு. அறநிலையத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது பற்றி :

தீர் : பொருளில் கண்டபடி ஆலய சகாயத் தொகை வருமானத்தில் 40% வருமானத்தை பட்டியலிலுள்ள ஆலயங்களிலிருந்து வசூலிப்பது போல் அறநிலையத்துறை வசூலித்திடவும் மேற்படி தொகையை "ஆலய ஊழியர்கள் ஊதிய நிதி" என்ற தலைப்பில் ஆணையர் நேரடியாக நிர்ணயிக்கவும், ஆலய ஊழியர்கள் சம்பளங்களை ஆலய நிர்வாக அதிகாரிகள், நிர்வாகிகள் நேரடியாக ஆணையர் அவர்களுக்கு சம்பள பட்டியல் சமர்ப்பித்து, ஊதியத் தொகையைப் பெற்று, ஊதியத்தை மாதா மாதம் முதல் தேதியே கொடுத்திட, வகை செய்ய, தமிழக அரசையும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

பொ. 5. பட்டியல்இல்லாத சுமார் 50,000 சிறு ஆலயங்களை 20 ஆலயங்களுக்கு மேற்படாமல் ஒரு குருப் ஆக ஆக்கி ஒரு குருப் ஆலயங்களின் கூடுதல் வருமானம் சுமார் ரூ. 30,000 மேற்படாமல் அவைகளுக்கு 5வது நிலை ஆலயங்களாக நிர்ணயித்து, அந்த குருப் ஆலயங்களுக்கு 5வது நிலை நிர்வாக அதிகாரிகளாக மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிவரும் ஆலய ஊழியர்களை ஆணையர் அவர்கள் நேரடியாக நியமிக்க அதிகாரம் அளித்திட மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களையும் அரசையும் கேட்டுக் கொள்ளுதல் பற்றி.

தீர் : பொருளில் கண்ட மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் செய்துக்கொடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. 5வது நிலை நிர்வாக அதிகாரியின் சம்பளம் ரூ. 300-10-400-15-550 விகிதத்திற்கு குறையாமல் நிர்ணயிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

பொ. 6. ஆலய அலுவலக ஊழியர்கள் சுமார் 5000 ஊழியர்களை அரசு ஊழியர்களாக்கிடவும் ஆலய உள்துறை ஊழியர்கள் சுமார் 1,95,000 ஊழியர்களை ஸ்தல ஸ்தாபன ஊழியர்களைப் போல ஆக்கிடவும், தமிழ்நாடு அரசையும், மாண்புமிகு. அறநிலையத்துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்ளுதல் பற்றி :

தீர் : பொருளில் கண்ட ஆலய அலுவலக ஊழியர்கள், வெளித்துறை ஊழியர்கள் சுமார் 5000 ஊழியர்களை அரசு ஊழியராக்கிடவும் ஆலய உள்துறை ஊழியர்கள் சுமார் 1,95,000 ஊழியர்கள் ஸ்தல ஸ்தாபன ஊழியர்களைப் போல ஆக்கிடவும், இதனுல் பணிபாதுகாப்பு இதர சலுகைகள் கிடைத்திட செய்திட தமிழ்நாடு அரசையும், மாண்புமிகு. அறநிலையத்துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொண்டு தீர்மாணிக்கப்பட்டது

பொ. 7 : 30—6—78 முடிய அதற்கு முன்னதாக உள்ள காலத்தில் ஆலயங்களில் 25 வயதுக்கு உட்பட்ட ஊழியர்கள் ஆலய ஊழியராக ஆலய நிர்வாக அதிகாரி அவர்களால் நியமணம் செய்யப்பட்டு தற்பொழுது பனிபுரிந்து வருபவர்களுக்கு அறநிலை சட்ட விதியிலிருந்து விதிவிலக்கு அளித்து அவர்கள் தொடர்ந்து பணிபுரிந்துவர வகை செய்திட அறநிலையத்துறை ஆணையர் அவர்கள் ஆணையிடவேண்டிக் கொள்ளுதல் பற்றி :

தீர் : பொருளில் கண்ட விதிவிலக்கு அளித்து ஆணையிட அறநிலையத்துறை ஆணையர் அவர்களை வேண்டிக் கொண்டு தீர்மானிக்கப் பட்டது.

பொ. 8 : ஆலய ஊழியர்களுக்கு 30—9—78 முடிய உள்ள சம்பள பாக்கிகளை. நிதியுள்ள ஆலயங்கலிலிருந்து கடனாக வாங்கி 30—10—78க்குள் ஆலய நிர்வாகிகள் பட்டுவாடா செய்திட ஆணையிட வேண்டுமாய் அறநிலையத்துறை ஆணையர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுதல் பற்றி :

தீர் : பொருளில் கண்டபடி ஆணையர் அவர்களைக் கேட்டுக் கொண்டு தீர்மாணிக்கப்பட்டது.

பொ. 9 : ஆலய ஊழியர்களுக்கு ஆணையர் அவர்கள் அறிவித்த 1—7—77 முதல் பஞ்சப்படியும் 1—12—77 முதல் இடைக்கால நிவாரணமும் (பஞ்சப்படி) ஒரு சில ஆலயங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மட்டும் கிடைத்து, பெரும்பாலான ஆலயங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கிடைக்காமல் ஊழியர்கள் மன வேதனை அடைந்து கஷ்டப்படுவதால் உத்திரவிலுள்ள நிபந்தனைகளை நீக்கி, எல்லா ஊழியர்களுக்கும், பஞ்சப்படியும் இடைக்கால நிவாரணமும் அறிவித்தப்படி கிடைத்திட ஆணையர் அவர்கள் ஆணையிட கேட்டுக் கொள்ளுதல் பற்றி :

தீர் : பொருளில் கண்டபடி நிறைவேற்றிட 15 தினங்களுக்குள், கிடைக்காத ஆலய ஊழியர்களுக்கு கிடைத்திட ஆணையிட வேண்டுமாய் ஆணையர் அவர்களைக் கேட்டுக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

பொ. 10 : பழநி அருள்மிகு. தண்டாயுதபானி திருக்கோவில் ஊழியர்கள் சங்கம் 16—9—78ல் நிறைவேற்றிய முதல் தீர்மானத்தை ஆணையர் அவர்கள் ஏற்று 15—10—78க்குள் ஆணையிட கேட்டுக்கொள்ளுதல் பற்றி :

தீர் : பொருளில் கண்டபடி பழநி அருள்மிகு. தண்டாயுதபானி ஆலய ஊழியர்கள் சங்கம் 16—9—78ல் நிறை வேற்றிய முதல் தீர்மாணப்படி 1—4—78 முதல் அரசு ஊழியர்களுக்கு அளித்துள்ள ரூ. 15, 10 இடைக்கால நிவாரணம் மேற்படி ஆலய ஊழியர்களுக்கு கிடைத்திட ஆணையர் அனுமதி வழங்கிட மிகவும் வேண்டிக் கேட்டுக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. பழனி ஆலய ஊழியர்கள் உண்ணு விரதம் இருக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

பொ. 11 : ஆலய ஊழியர்களுக்கு திருமணக்கடன், மருத்துவகடன் கொடுத்திட 1975ம் ஆண்டு சட்டமன்றத்தில் அரசு அறிவித்ததை இது வரை அரசு ஆணையாக்கி அமுல்படுத்தாமல் இருப்பதால் ஆலய ஊழியர்கள் மிகவும் கஷ்டப்படுவதால் உடனடியாக அரசு ஆணையிட வேண்டி அரசு செயலாளர் அவர்களையும், ஆணையர் அவர்களையும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுதல் பற்றி :

தீர் : பொருளில் கண்டபடி கேட்டுக்கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

பொ. 12 : ஒரு சில ஆலய ஊழியர்களால் தமிழ்நாடு, திருக்கோவில் பணியாளர்கள் மத்திய சங்கம் என்ற பெயரால் தஞ்சையில் 2—10—78 முதல் 6—10—78 முடிய நடத்தப்படும் உண்ணு விரதம் போராட்டம் பற்றி :

தீர் : பொருளில் கண்டபடி ஒரு சில ஆலய ஊழியர்களால் மத்திய சங்கம் என்ற பெயரில் தஞ்சையில் 2—10—78 முதல் 6-10-78 முடிய நடத்தப்படும் உண்ணுவிரத போராட்டத்தை, தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கம் ஆதரிக்கவில்லை என்று ஆலய ஊழியர்களுக்கு, மாநில தலைவர் திரு. இரா. தென்னன் 28—9—78ல் அறிவித்ததையும், இது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்ததையும் அங்கீகரிக்கப்படுகிறது. ஆலய ஊழியர்கள் கோரிக்கைகளை மாநில சிறப்புத்தலைவர் திருமிகு. துரை கோவிந்தராசன் எம்.எல்.ஏ., அரசு தலைமை கொறடா அவர்கள் மூலமாக தமிழக அரசை அணுகி நிறைவேற்றிட முயற்சிகள் எடுத்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

பொ. 13 : சங்க வளர்ச்சியும், ஊழியர்கள் முன்னேற்றமும் கருதி, மாவட்ட மாநாடுகளை, எல்லா மாவட்டங்களிலும் 4 மாதத்திற்குள், மாவட்டப் பொருப்பாளர்கள் நடத்திட, கேட்டுக் கொண்டும், இறுதியில் மாநில மாநாட்டினை நடத்திடவும் முடிவு செய்வது பற்றி :

தீர் : பொருளில் கண்டபடி. முடிவு செய்து தீர்மானிக்கப்பட்டது.

பொ. 15 நான்காம்நிலை நிர்வாக அதிகாரிகள் நியமனத்தில் 3ல் 2 பங்கு (66.2/3%) ஆலய அலுவகை ஊழியர்களுக்கே அரசு தேர்வு ஆணைக்குழு ஒதுக்கீடு செய்து தேர்ந்தெடுக்க மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் வேண்டிக் கொள்ளுதல் பற்றி :

தீர் : பொருளில் கண்டபடி கேட்டுக்கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

பொ. 16. ஆலய நிர்வாகம் நன்கு நடைபெறவும் தூய்மையாக இருக்கவும், பூஜைகள் ஒழுங்காக தடையின்றி நடத்திடவும் ஆலயங்களுக்கு தேவையான மளிகை சாமான்கள், பூஜா சாமான்கள், ஜவுளிகள், எண்ணெய், நெய், பாத்திரங்கள் ஆகியவைகளை ஒவ்வொரு உதவி ஆணையர் உள்ள தலைமையக ஊரிலும் அறநிலையத்துறையின் நேரடி நிர்வாகத்தில், ஒரு முதல் கிரேடு நிர்வாக அதிகாரி பொருப்பில் வைத்து, உதவி ஆணையர்கள் ஆளுகைக்கு உட்பட்ட இடங்களிலுள்ள பட்டியலிலுள்ள ஆலயங்கள், பட்டியலில் இல்லாத ஆலயங்கள் கட்டாயமாக வாங்கிட செய்ய ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு. அறநிலையத்துறை அமைச்சர் அவர்களையும், அரசையும் கேட்டுக் கொள்ளுதல் பற்றி.

தீர் : பொருளில் கண்டபடி செய்து கொடுக்க மாண்புமிகு. அறநிலையத்துறை அமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் கேட்டுக்கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

பொ. 17 ஆலய ஊழியர்கள் ஓய்வு பெற்று 30 தினங்களுக்குள் பணிக்கொடை கொடுத்திட வகை செய்திட, ஆணையர் அவர்கள் ஆணையிட வேண்டிக் கொள்ளுதல் பற்றி :—

தீர் : பொருளில் கண்டபடி ஆணையர் அவர்களை வேண்டிக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

பொ. 18. சங்கத்திற்கு கொடி நிர்ணயித்தல் :—

தீர் : சங்கத்திற்கு மஞ்சள் நிறத்தில் கொடியும், கோபுரம் பச்சையில் மத்தியிலும், அதில் தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கம் என்று எழுதியும், அமைத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

பொ. 21 ஆலய ஊழியர்களுக்கு க்ஷேமநலநிதி அமுலாக்கப்படாத ஆலயங்களுக்கு உடனடியாக அமுலாக்கி ஆலய நிர்வாகிகளுக்கு ஆணையிட ஆணையர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுதல் பற்றி:

தீர் : பெரும்பாலான ஆலயங்களில் க்ஷேமநலநிதி (C.P.F) ஆலய ஊழியர்களுக்கு அமுலாக்கப்படவில்லை. ஆதலால் உடனடியாக அமுலாக்கிட ஆலய நிர்வாகிகளுக்கு ஆணையிட வேண்டுமாய் ஆணையர் அவர்களைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| | |
|---|---|
| (ஒம்) ஏ. கே. வேலாயுதம்,<br>துணை பொதுச் செயலாளர்.<br>1-10-78 | (ஒம்) கே. சொக்கலிங்கம்,<br>மாநிலப் பொருளாளர்.<br>1-10-78 |
| (ஒம்) எஸ். முத்துக்கணபதி,<br>மாநில பொதுச்செயலாளர்.<br>1-10-78 | (ஒம்) இரா. தென்னன்,<br>மாநிலத்தலைவர்.<br>1-10-78 |

**ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்**

எங்களிடம் உயர்தர மளிகை சாமான்கள்
நல்ல முறையில் கிடைக்கும்.

No. 47. பி. வி. கோவில் தெரு,
புதுப்பேட்டை, ராயப்பேட்டை,
சென்னை—14.

உரிமையாளர்
சக்திவேல்.

# அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி ஆலயம், குணசீலம்.

குணசீலம் என்னும் இவ்வூர் திருச்சியிலிருந்து சேலம் செல்லும் சாலையில் 14-வது மைலில் உள்ளது. ஸ்ரீரங்கத்திற்கு மேற்கே 10 மைல் தூரத்தில் காவிரியின் வடகரையிலும் அமைந்துள்ளது. இவ்வூர் தென் திருப்பதி எனப் புகழப்பட்டு வழங்கி வருகிறது.

திருப்பதி திருவேங்கடமுடையானே குணசீல மகரிஷிக்கு இவ்விடத்தில் ப்ரத்யக்ஷமாகி, அவர் வேண்டிக் கொண்டபடி இங்கு வரும் சகல பக்தர்களுக்கும் அவரவர் மனக்கவலைகள், வியாதிகள் ஆகியவற்றை நிவர்த்தி செய்து அநுக்ரஹம் செய்வதாய் வாக்களித்துள்ளார். அதன்படியே இன்றும் அவீக்ரஹித்தும், முக்கியபாக குறிப்பாக சித்த சுவாதீனமற்றவர்களை (பைத்தியம் பிடித்தவர்களை) தெளிய வைத்து நல்ல நிலையிலாக்கியும் அவர்களை தன்னுடைய பக்தர்களாக ஆக்கி வருகின்றுர்.

இக்கோயிலில் மிக அருகேயுள்ள காவிரியில் வருடம் முழுதும் வற்ருத ஜலம் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த புண்ணிய க்ஷேத்திரத்தின் எதிர்க்கரையில் "திருப்பராய்த் துரை" என்ற ஊரில் பாடல் பெற்ற பெரியதோர் சிவஸ்தலம் உள்ளது. தவிர இவ்வூர் கிழக்கே சுமார் 1 மைலில் காவிரி நதியும், சொள்ளிடம் நதியும் பிரிகின்றது. இங்கு தான் முக்கொம்பு (மேலணைக்கட்டு) என்று சொல்லப்படுகிறது. இங்கே வந்தவர்க்கு களிப்பூட்டும் வண்ண வண்ண ஓவியக் கலை நுட்ப காட்சிகள் இயற்கையெழிலாய் சுற்றுலாவாசிகளின் உயர் இருப்பிடமாய்த் திகழ்கிறது. (பிக்னிக் சென்டர்) இந்த ஸ்தலத்தில் பகவானை வேண்டிக் கொண்டு ஒரு மண்டலம் அல்லது அரை மண்டலம் நேம நிஷ்டையுடன் பிரீதியுடன் இருப்பவர் தங்கள் இஷ்டத்தை அடைவர் என்பதில் ஐயமில்லை.

இப்பகவானுக்கு சந்தனத்தினுல் முழுவதும் அலங்கரித்து சந்தனக் கோலத்துடன் இருப்பதையும, பூப்பந்தலிட்டும், நேரில் கண்டு களிக்கக் கூடிய பெரிய அபிஷேகங்கள் செய்வதையுமே பக்தர்கள் குறிக்கோளாகக் கொண்டு, கைங்கரியம் செய்து மகிழ்கின்றனர் மேலே கண்டவைகளே இச்சீனிவாசப் பெருமானின் பிரீதியாகக் கருதப்படுகிறது. திருப்பதி பெருமாளுக்கு செய்து கொண்ட பிரார்த்தனையை குணசீலம் ஸ்ரீனிவாசப் பெருமாளிடம் செய்து விடலாம். ஆனுல் குணசீலத்திற்கு வேண்டிக் கொண்டு, திருப்பதிக்குச் செலுத்தக் கூடாது. இது பல்லாயிரக்கணக்கானேர் கண் முன் கண்ட உண்மை

பிரதி வருஷம் ஆவணி மாதத்தில் பவித்திர உற்சவம் மூன்று தினங்களும் புரட்டாசியில் பத்து தினங்கள் ப்ரும் மோத்ஸவமும் குறிப்பாக திருவோணத்தன்று ரத உத்வஸமும் சித்திரை மாதத்தில் தெப்ப உற்சவமும்நடைபெற்று வருகிறது. தங்கள் தங்களின் பிரார்த்தனைகளை ரத உத்ஸவத்தன்று செய்து முடித்து மகிழும் பக்தர்களில் எண்ணிக்கை ஆயிரக் கணக்கானேர் ஆகும்.

இல்விதம் இக்கலியுகத்தில், புராணப் பெருமை வாய்ந்த குணசீலம் என்னும் இத்திருதலத்தில் கண்கண்ட தெய்வமாய் அண்டியவர்க்கு வேண்டியதைச் செய்து தருபவனுய், சித்தப் பிரமை கொண்டோர்க்கு சித்தம் தெளிவித்து, கர்ம வசத்தால் உள்ள நோய் தவிர மற்றவற்றை தனதருளால் நீக்கி விடுபவனுய், ஸ்ரீனிவாசக் கோலத்திலே "பிரசன்ன வேங்கடாசலபதி" எனப் புகழுடன் காட்சியளித்து வரும் இப்பகவானை அனைவரும் தவருது வந்து தரிசித்தும், எம்பெமானின் அருள் பெற்றும், இத்திருத்தலத்திற்கு பிரார்த்தனைக் காணிக்கைகளை அள்ளி வழங்கிடவும், சேவார்த்திகளில் வசதிக்கேற்ப வசதிகள் பல செய்திடவும் ஊக்கமளித்து உறுதுணையாய் நின்றிட அன்பர்களை அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**கே. வி. ரெங்கநாத அய்யங்கார்,**
நிர்வாக அறங்காவலர்
(மற்றும் அறங்காவலர் குழு)

# மாநில பொருளாளர் அறிவிப்பு !

அனைத்து ஆலய ஊழியர்களையும 1388-ம் பசலிக்கு உறுப்பினர்களாக சேர்த்திட அனைத்து பொறுப்பாளர்களும் செயல் படவேண்டும். தேவையான விண்ணப்ப பாரங்களை மாநில சங்கத்திற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொண்டு, சேர்க்கப்பட்ட விண்ணப்பத்தாளையும் சந்தாத் தொகையும் மாநில சங்கத்திற்கு உடன் அனுப்பி உறுப்பினர் உரிமைச் சீட்டை பெற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

**கு. சொக்கலிங்கம்,**
மாநில பொருளாளர்.

# வருங்கால வைப்பு நிதித் திட்டம் !

தமிழ் நாடு ஆலய ஊழியர்கள் சங்க 2 வது மாநில மாநாட்டு கோரிக்கை நாள் — 3-9-1973.

தமிழக அரசு ஆணை எண்—219 வணிகவரி மற்றும் அறநிலைய துறை நாள் — 27-2-1972.

ஆணையர், ந. க 178H/75 அ உ நாள் — 18-3-1975

நி. மு. 9128/75 நாள் — 31-10-1977-

நி. மு. 20564/77 நாள் — 12-9-1977.

1-10-1978 கடலூரில் கூடிய மாநில செயற்குழு தீர்மானம் எண் 21 ல் உள்ளபடி, ஆணையர் அவர்களின் ரூ. 10 ஆயிரத்திற்கு மேல் வருவாய் உள்ள ஆலயங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வருங்கால வைப்பு நிதி கணக்கு ஏற்படுத்த உத்திரவு அனுப்பப் பட்டுள்ளது. அரசு ஆணை ஆணையர் உத்திரவை இனியாவது ஆலய அதிகாரிகள் மதித்து செயலாக்க வேண்டுகிருேம்.

(மாதிரி படிவம்)

## பங்குவைப்பு நிதியில் மனுதாரராக சேர விண்ணப்ப மனு.

1. கணக்கு அதிகாரியால் நிர்ணயித்த கணக்கு எண்:
2. மனுதாரர் பெயர்;
3. மனுதாரர் உத்தியோகம்:
4. வேலைக்குச் சேர்ந்த தேதி;
5. பதவியில் ஒரு ஆண்டு காலம் பூர்த்தி செய்த தேதி:
6. பதவியிலிருந்கு ஓய்வு பெரும் தேதி:
7. பதவி நிரந்தரமானதா, தற்காலிகமானதா, பழகுநர் காலத்தில் இருட்பவரா:
8. தற்காலிகமாக நியமிக்கப்பட்டவரானுல் பதவி மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்குமா என்பது பற்றி தலைமை அதிகாரியின் கருத்து:
9. மாதம் கொடுக்கும் சந்தா தொகை (Subscription) :
10. மனுதாரரின் சம்பளம்-
11. கட்டாய சந்தாதாரா அல்லது விருப்பப்பட்டு ஏற்றுக்கொண்ட சந்தாதாரா :
12, மனுதாரருக்கு குடும்பமிருக்கிறதா :

இடம் :

தேதி : மனுதாரர் கையொப்பம். உத்தியோகம்.

நிர்வாக அதிகாரியின் உத்தரவு.

பங்கு வைப்புநிதியில் சேர்க்கப்பட்டது.

கணக்கு எண். கையொப்பம்.

நிர்வாக அதிகாரி.

| நேரம் 1. | ஊர் & இடம் 2. | கூட்டமைப்பு 3. |
|---|---|---|

இரவு நாகர்கோவில் ஓய்வு விடுதியில் தங்கல்.

15—11—78 புதன் காலை 6—00 நாகர்கோவிலிலிருந்து திருநெல்வேலி புறப்படுதல்.

| | | |
|---|---|---|
| 8.00—10.00 | திருநெல்வேலி<br>அ/மி காந்திமதி-நெல்லையப்பர் ஆலயம். | நெல்லையப்பர் ஆலய ஊழியர்கள் மற்றும் நெல்லை மாவட்ட ஆலய ஊழியர்கள் கூட்டம்.<br>(திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், நாங்குநேரி நெல்லை வட்டங்கள்.) |
| மதியம் | | |
| 12.00— 1.30 | அம்பாசமுத்திரம்.<br>அ/மி கிருஷ்ணன் ஆலயம். | அம்பாசமுத்திரம் வட்ட ஆலய ஊழியர்கள் சங்க கூட்டம். |
| 3.00— 5.30 | பண்பொழில்<br>அ/மி திருமலை முத்துக்குமாரசுவாமி ஆலயம். | தென்காசி வட்டம் மற்றும் பண்பொழில் ஆலயஊழியர்கள் கூட்டம்: |
| 6.00— 6.30 | திருக்குற்றாலம்.<br>அ/மி குற்றாலநாதசுவாமி ஆலயம் செல்லல் | |
| இரவு | | |
| 8.00— 9 00 | சங்கரன்கோவில்<br>அ/மி சங்கரநாராயணசுவாமி ஆலயம் | சங்கரன்-கோவில் கோவில்பட்டி வட்ட ஆலய ஊழியர்கள் கூட்டம். |

இரவு: சங்கரன்கோவில் ஓய்வு விடுதியில் தங்கல்

16—11—78 வியாழன் — காலை 6—00 மணிக்கு இராமநாதபுரம் (மேற்கு) மாவட்டம் புறப்படுதல்.

**4. இராமநாதபுரம் மேற்கு மாவட்டம், 5. மதுரை மாவட்டம்: 16-11-78 வியாழக்கிழமை.**

| | | |
|---|---|---|
| காலை | | |
| 8.00—10.00 | அ/மி வில்லிப்புத்தூர்<br>அ/மி ஆண்டாள் ஆலயம். | ராமநாதபுரம் மேற்கு மாவட்ட ஆலய ஊழியர்கள் கூட்டம். |
| மதியம் | | |
| 3.00— 4.00 | மதுரை<br>அ/மி கூடலழகர் ஆலயம். | மதுரை மாவட்டம் தென் வட்டங்கள் ஆலய ஊழியர்கள் கூட்டம். |
| 4.00— 5.00 | மதுரை<br>அ/மி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம். | அ/மி மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் ஊழியர்கள் கூட்டம் |
| இரவு | | |
| 7.00— 9.00 | பழநி<br>அ/மி தண்டாயுதபாணிசுவாமி ஆலயம் விடுதி. | அ/மி தண்டாயுதபாணிசுவாமி ஆலய ஊழியர்கள் சங்க கூட்டம். |

இரவு: பழநி தேவஸ்தான விடுதியில் தங்கல்.

| | | |
|---|---|---|
| 8.00— 9.00 | 17—11—78 திண்டுக்கல்<br>அ/மி காளஹத்தீஸ்வரர் ஆலயம். | மதுரை மாவட்ட வடக்கு வட்ட ஆலய ஊழியர்கள் கூட்டம். |

**6. திருச்சி மாவட்டம் - 17-11-78 காலை 11-00 மணி முதல்.**

| | | |
|---|---|---|
| 11.00— 2 00 | கரூர்<br>அ/மி பசுபதீஸ்வரர் ஆலயம். | திருச்சி மாவட்டம் வடக்கு வட்ட ஊழியர்கள் கூட்டம் |
| மாலை | | |
| 5.00— 7.00 | திருச்சி-மலைக்கோட்டை.<br>அ/மி தாயுமானசுவாமி ஆலயம். | திருசசி மாவட்டம் தெற்கு வட்ட ஊழியர்கள் கூட்டம் |
| இரவு | | |
| 7.30— 8.30 | ஸ்ரீ ரெங்கம்<br>அ/மி ரெங்கநாதசுவாமி ஆலயம் விடுதி. | அ/மி ரெங்கநாதசுவாமி ஆலய ஊழியர்கள் சங்க கூட்டம் |

இரவு: 10.30 மணிக்கு தஞ்சாவூர் சேர்தல்.

குறிப்பு: மேற்படி சுற்றுப் பயணத் திட்டத்தில் நேரங்கள் மாறுதலுக்குட்பட்டது.
கோரிக்கை குறைகளை விண்ணப்பம் மூலம் தந்திட வேண்டுகிறோம்.


அழகிய அச்சு வேலைகளுக்கும், திருக்கோவில் ரசீது புத்தகம், அர்ச்சனை சீட்டு மற்ற இதர ஆலய சம்பந்தப்பட்ட அச்சு வேலைகளுக்கு,

**கனகதாரா பிரிண்டர்ஸ்**

251, அண்ணா சாலை, காங்கிரஸ் பில்டிங் எதிரில்
தேனாம்பேட்டை. சென்னை—600006
உரிமையாளர்:
K. சண்முகம்.

போன்— 673986

**திருமலை புக் டிப்போ**

(குளத்திற்கு எதிரில்)

2. கெங்காதீஸ்வரர் கோவில் தெரு,
புரளைவாக்கம். சென்னை— 600089.

# அருள்மிகு தேவநாத சுவாமி திருக்கோயில்.

## திருவந்திபுரம்-தென்னுற்காடு மாவட்டம்,

தென்னுற்காடு மாவட்டம் கடலூர் நகருக்கு மேற்கு திசையில் 7 கி மீட்டர் தூரம் உள்ள் திருவந்திபுரம் என்னும் பேரூரில் சஞ்சீவி மலைத் தொடருக்கும் கருடா நதிக்கும் இடையில் அமைந்துள்ள தேவநாதசாமி ஆலயம் 108 வைஷ்ணவ ஆலயங்களில் ஒன்ருகும். இதை நடு நாட்டுத் திருப்பதி என்பர்.

இத்தலத்தில் தெய்வநாயகன் அருளாளன் தேவநாதன் அருளாட்டி செங்கமலநாயகியுடன் காட்சி தருகின்ருர். இத்தலத்தில் பார்க்கவி வைகுண்டநாயகி, தரங்கமுகநந்தினி, அபுர்ருகவாசினி முதலிய திருப்பெயர்களுடன் நாயகியார் வீற்றிருக்கின்ருள். அருளாளன் தேவநாதனை திருப்பதி மலைவாழ் கொடைவள்ளல் வெங்கடாசலபதிக்கு அண்ணனுக கருதப்பட்டு பக்தர்கள் முடியெடுத்த , காதணி அணிதல், திருமணம் செய்தல் போன்ற வழிபாடுகளை செய்து வருகின்ருர்கள்.

இத்தலத்தில் ஆறுகால பூஜை நடைபெறுகிறது. வில்வமரம் தலவிருட்சமாக உள்ளது. ஆதிசேடனுல் உண்டாக்கப்பட்ட நாக நன்னீர் உள்ள கிணறும், கருட பகவானுல் அமைக்கப்பட்ட கருடாநதியும், சஞ்சீவி மலையின் மேலுள்ள பிரம்ம, இலக்குமி நன்னீரும் வழிபடுவோர்களால் வழிபாட்டு நன்னீர்களாக கொண்டாடப்பட்டு வருகிறது.

சஞ்சீவி மலைமேல் தெய்வநாயகன் தேவநாதன் சுற்றத்தாருடன் கல்கி அவதாரமாக காட்சி அளிக்கின்ருன். புராதன தலமாகும்.

இத்தலத்தை சன்மார்க்க செம்மல், கொடை வள்ளல் இராமலிங்க அடிகளார் "வெவ்வினை தீர்த்தருளுகின்ற ராமா" என்று தனது திருவருட்பாவில் போற்றுகின்ருர். இத்தலத்திற்கு சோழ பாண்டிய மன்னர்கள் நிலமும் பொன்னும் பொருளும் அன்பளிப்பு கொடுத்ததையும் கோப்பெருஞ்சிங்க தேவன் கோபுரம் கட்டியதையும் இத்திருக்கோயிலில் உள்ள 50 கல்வெட்டுகளில் கூறப்பட்டிருக்கின்றது.

இத்தலத்திற்கு 300 ஏக்கர் நஞ்சை புஞ்சை நிலங்களும் அதன் மூலம் ஆண்டிற்கு ரூ. 60,000 வருவாயும் இதர வருவாயாக ரூ. 30,000 மும் வந்து கொண்டிருக்கிறது. இத்தலத்திற்கு வழிபடுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருவதால் வழிபடுவோர் விடுதி திருமண மண்டபம் கட்டுவதற்கு திருப்பணிக்குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. தற்பொழுது ஓய்வு விடுதி ரூ. 45000 செலவில் கட்டப்பட்டு திறப்பு விழா செய்ய உள்ளது. குடிநீர் வசதிக்காக பம்பு செட்டு மூலம் குடிநீர் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் இத்தலத்திற்கு இந்திய துணைகண்டத்தில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த வழிபடுவோர்கள் இந்துக்களில் பல இனத்தவர் வருகை தந்த வண்ணமிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

அன்பர்கள் ஆலயம் வருக அருளாசி பெருக

**புலவர். திருநாவுக்கரசு B. A.**
செயல் அலுவலர்.

---

போன் நெ. 179.

நீடித்த உழைப்பு உயர்ந்த தரமும் உங்களை மகிழ்விக்கும்.

## ஸ்ரீ வள்ளி விலாஸ்

## ராயல் சில்க் ஹவுஸ்

64-65 லாரன்ஸ் ரோடு,
திருப்பாதிரிப்புலியூர். கடலூர்-2

**நல்ல தரமுள்ள பட்டு. மில் & கைத்தறி துணிகளும் எப்பொழுதும் எங்களிடம் விஜயம் செய்யுங்கள்.**

---

## சென்னை குமரகோட்டம் அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

105, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு, சென்னை-600 001

### மஹா கந்த சஷ்டி மஹோற்சவமும் 47-வதாண்டு லக்ஷார்ச்சனை வைபவமும்.

காளயுக்திளு ஐப்பசி மீ 14உ (5-10-78) செவ்வாய் கிழமை முதல் (5-11-78) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணியுடன் முடிகிறது.

இச்சென்னை மாநகரின்கண் ஆனைகெவுனி குமரக்கோட்டத்தில் எழுந்தருளியுள்ள மூலவருக்கும் ஷண்முகருக்கும், உற்சவமூர்த்திக்கும் காளயுக்திளு ஐப்பசிமீ 14உ (31-10-78) செவ்வாய்க்கிழகை முதல் ஐப்பசிமீ 19உ (5-11-78) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணி வரையில் லக்ஷார்ச்சனை நடைபெறும். கந்தர் சஷ்டி ஆறு நாட்களில் அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருவருள் துணைக்கொண்டு ஒவ்வொரு கால பூஜைகளிலும் அபிஷேக அலங்கார நைவேத்திய, சோடசோபசரா, வேதபாராயன ஜபஹோமாதி முதலிய வைபவங்களுடன் வெகு [illegible]ரிசையாக விழாக்கள் நடைபெறுமாகையால் பக்தர்கள் அனைவரும் தரிசித்து அருள்மிகு ஷண்முகநாதன் வரப்பிரசாதம் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

பக்தர்கள் லக்ஷார்ச்சனையில் கலந்து கொள்ள வேண்டுவதுடன் ஒரு அர்ச்சனைக்கு ரூபாய் 18-00 தேவஸ்தானத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

M. V. திருநாவுக்கரசு
நிர்வாக அதிகாரி.

---

## தமிழ்நாடு ஆலய ஊழியர் சங்கம்

பதிவு எண். 12/72

செங்கை & வட ஆற்காடு மாவட்டகிளை

### "மாவட்டக் பொதுக்குழுவும் பாராட்டும்"

நாள் : 19—11—78 ஞாயிறு காலை 10மணி.

இடம்: ஜெயலக்ஷ்மி கல்லாண மண்டபம். திருவொற்றியூர் நெடுஞ்சாலை, திருவொற்றியூர், சென்னை. 600 019.

தலைவர்: திரு. S. கல்யாணசுந்திரம் (தலைவர் செங்கை வட ஆற்காடு)

வரவேற்புரை: திரு K. சுப்பிரமணியன் மாவட்டதுணை செயலாளர்

பாராட்டுபெறுவோர் : திரு. துரை கோவிந்தராசன் M.L.A. மாநில சங்க சிறப்புத்தலைவர் அவர்கள்.

பாராட்டு சிறப்புரை : திருமிகு P. சிகாமணி M.L.A. அவர்கள் (திருவொற்றியூர் தொகுதி)

திருமிகு இரா. தென்னன் மாநில தலைவர் அவர்கள்.
,, S. முத்துகணபதி ,, பொதுசெயலாளர்
வடபழனி C. கந்தசாமி ,, துணை தலைவர்
பழனி ,, J. சங்கரன் நாயர் ,, ,,
சிக்கல் ,, A.K. வேலாயுதம் ,, துணைபொதுசெயலாளர்
தொட்டியம் ,, R. வேலாயுதம் ,, ,,
,, கு. சொக்கலிங்கம் ,, பொருளாளர்
,, இரா முல்லைவேந்தன் ஆசிரியர் ஆலய ஊழியன்

பாராட்டுரை: புரசை பெரியவர் P. முனுசாமி.
சென்னை மாவட்டத் தலைவர்.

மாவட்ட தலைவர் சொற்பொழிவு.
,, A.P, சதாசிவம் ,, துணை தலைவர்
,, V. கிருபாகரன் ,, செயலாளர்
,, ஞானப்பிரகாசம் ,, துணை செயலாளர்
,, C.K. கிருஷ்ணமூர்த்தி ,, பொருளாளர்
,, ஈ நீலகண்ட குருக்கள் செங்கைமாவட்ட பொருளாளர்
,, இராமநாதன் அ/மி. பெரும்புதூர் வட்ட தலைவர்
,, P, செல்வசுந்திரகுமார் ,, பொருளாளர்
,, S செல்லப்பாபட்டாச்சாரி பூவிருநதவல்லி
,, S. கணேசமுதலியார் கூவம்
,, M. ஜெகதீச குருக்கள் மப்பேடு
,, கிட்டப்பா பெரியபாளையம்

நன்றியுரை : T.D. சம்பந்தபிள்ளை திருவொற்றியூர்.

இவன்.
G. குப்புசாமி,

---

சென்னை—சூளை செவ்வேள் கோட்டமென வழங்கும் அ.மி. சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம்

## கந்த சஷ்டி திருவிழா

**5-11-78 சூரசம் ஹாரம்**

**6-11-78 திருக்கல்லால்யாணம்**

பக்தர்கள் வருக, வணங்கி அருள் பெருக.

இவன்.
**தி. நரபதிராமன்**
செயல் அலுவலர்

ஆசிரியரும், வெளியிடுபவரும் : இரா. முல்லைவேந்தன். அச்சிட்டோர் : கலையாரம் பிரிண்டர்ஸ், 181, பெல்ஸ் சோடு, சென்னை-5.